**செய்தி வெளியீடு எண்: 765** **நாள்:16.10.2020**

**<u>'செய்தி வெளியீடு</u>**

**"நெகிழி கழிவு மேலாண்மை விதிகள் 2016"–2018ல், திருத்தம் செய்யப்பட்டது குறித்த மதிப்பீட்டாய்வுக் குழு கூட்டம்**

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு (முன்னர் மாநில திட்டக்குழு), **"நெகிழி கழிவு மேலாண்மை விதிகள் 2016"– 2018ல், திருத்தம் செய்யப்பட்டது 1.** நெகிழி மூலம் தக்க வைக்கும் சுவர், **2.** கழிவுகளைப் பிரித்தல் மற்றும் அதன் மூலம் வருமானத்தை உருவாக்குதல், **3.** நெகிழி மூலம் சாலைகளை உருவாக்குதல், **4.** நெகிழி கழிவு மேலாண்மையில் பங்கு, தயாரிப்பாளர்களின் பதிவு / இறக்குமதியாளர்/ நெகிழி பொருட்களுக்கான உரிமையாளர் ஆகியவை குறித்த செயல்பாடுகளின் மதிப்பீட்டாய்வு குழுக் கூட்டம் காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் (முன்னர் மாநிலத் திட்டக் குழு) மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் **16.10.2020** அன்று காலை **11.00** மணியளவில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு காணொளி அரங்கம், எழிலகம், சென்னை–**600 005**ல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முனைவர் பி. துரைராசு, இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, முனைவர் பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப.,

குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, திருமதி சரயு, இ.ஆ.ப., திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம் பிரிவு–1, உதகமண்டலம், துறைசார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் தொடக்க உரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள், தமிழ்நாட்டினை நெகிழி மாசில்லா மாநிலமாக உருவாக்கிடவும், ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படக்கூடிய நெகிழிகளை ஒழிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள் (Eco-Clubs),தேசிய பசுமைப்படை மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும், மாவட்டச் சுற்றுச்சூழல் குழுக் கூட்டங்கள் மற்றும் பெருந்திரள் விழிப்புணர்வு பேரணிகள் மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் நடைப்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள், நெகிழி மனித உயிரை மட்டும் இல்லாமல் இந்த பூமியில் வாழும் அனைத்து உயிரையும் அழித்துவிடும் ஒரு கொடிய மனித கண்டுபிடிப்பு எனவும், மக்களால் பயன்படுத்தி எறியப்படும் இந்நெகிழியானது கடல் நீருக்குள் சென்று கடலில் வாழும் பல உயிரினங்களான (மீன், ஆமை (ம) திமிங்கலம்) போன்றவைகளின் உயிரை பறித்துவிடுவதாகவும் தெரிவித்தார்.

எனவே, முடிந்தவரை நெகிழியை தவிர்த்து மாசில்லா தமிழகத்தை உருவாக்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் வழியை பின்பற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 110 விதியின் கீழ் 05.06.2018 அன்று சட்டமன்றப் பேரவையில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பொருட்களை தயாரித்தல், சேமித்து வைத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் உபயோகித்தல் போன்றவற்றிற்கு 01.01.2019 முதல் தடை செய்யப்படுவதாக அறிவித்தார்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், நெகிழி கழிவு மேலாண்மை குறித்து தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம் எடுத்துவரும் நடவடிக்கைகளை பின்வருமாறு தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 664 உள்ளாட்சி அமைப்புகளில், நாளொன்றுக்கு 1098 டன் நெகிழி கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 90 சதவீத நெகிழி கழிவுகள் உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்பட்டு அதில் மறுசுழற்சி நெகிழி பொருட்கள் மறுசுழற்சியாளர்களிடம் விற்கப்படுகின்றன. குறைந்த மதிப்புள்ள நெகிழி சாலைகள் அமைப்பதற்கும் மற்றும் மறுசுழற்சியாகாத அதிக எரிதிறன் கொண்ட நெகிழி பொருட்கள் சிமெண்ட் ஆலைகளுக்கும் எரிபொருளாக அனுப்பப்படுகிறது.

நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016 விதி 13–ன்படி, தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் 91 நெகிழி உற்பத்தியாளர்களுக்கும், 98 நெகிழி மறுசுழற்சி தயாரிப்பாளர்களுக்கும் மற்றும் 8 பல்வேறு அடுக்கு கொண்ட நெகிழி தயாரிப்பாளர்களுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தமிழக அரசு, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986, பிரிவு 5–ன் கீழ் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பொருட்களின் மீதான தடை அறிவிப்பின்படி தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்களாவன :

1. உணவுப்பொருட்களை கட்ட உபயோகப்படுத்தப்படும் நெகிழி தாள் / உறை, 2. உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் நெகிழி தாள், 3. தெர்மாக்கோல் தட்டுகள், 4. நெகிழி பூசப்பட்ட காகித தட்டுகள், 5. நெகிழி பூசப்பட்ட காகித குவளைகள், 6. நெகிழி தேநீர் குவளைகள் 7. நெகிழி குவளைகள், 8. தெர்மாக்கோல் குவளைகள் 9. நெகிழி பைகள் (எந்த அளவிலும், எந்த தடிமனாக இருப்பினும்) 10. நெகிழி பூசப்பட்ட பைகள், 11. நெய்யாத நெகிழி தூக்குப் பைகள், 12. நெகிழி தண்ணீர் பாக்கெட்டுகள், 13. நெகிழியாலான உறிஞ்சு குழாய்கள் மற்றும் 14. நெகிழி கொடிகள் ஆகியவை தயாரிக்கப்படுவதும், சேமித்து வைப்பதும், விநியோகிப்பதும், போக்குவரத்து செய்வதும், விற்பதும் மற்றும் உபயோகிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள், நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் துறை எடுத்துவரும் நடவடிக்கைகளை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

**நெகிழி கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைத்தல்**

90 சதவிகித பிட்டுமென் (bitumen) மற்றும் 10 சதவிகித நெகிழி (plastic) கழிவுகளை சிறு துகள்களாக்கி கலந்து தயாரிக்கப்படும் சாலைகளானது நகராட்சி திடக்கழிவுகளில் உள்ள நெகிழியின் கூறுகளை

எளிதில் அகற்றி மீதமுள்ள நெகிழியற்ற திடக்கழிவுகளை கரிம உரமாக மாற்ற உதவுகிறது.

- **2011–12** முதல் **2014–15** வரை தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**218.67** கோடி நிதியின் மூலம் **1599.36** மெட்ரிக் டன் எடைக்கொண்ட நெகிழி கழிவுகளை பயன்படுத்தி **1599.36** கி.மீ தூரம் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

## நெகிழி கழிவுகளைக் கொண்டு பிடிப்புத்தன்மை மிகுந்த சாலைகள் அமைத்தல்

நெகிழிப் பொருட்களை சுமார் **1200°**செல்சியஸ் முதல் **1500°**செல்சியஸ் வரை வெப்பமடையச் செய்யும் போது கிடைக்கும் உருகிய நிலையைக் கொண்டு பிடிப்புத்தன்மை மிகுந்த சாலைகள் அமைக்கப்படுகின்றன.

கூட்டத்தின் நிறைவுரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி.பொன்னையன் அவர்கள் திருச்சி, கோவை மற்றும் ஈரோடு போன்ற மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்ட நெகிழி புட்டிக்களைக் (பிளாஸ்டிக் பாட்டில்) கொண்டு நெகிழியை மறுசுழற்சி செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு விவரித்தார்.

1. பயன்படுத்தப்பட்ட நெகிழி புட்டிக்களைச் சேகரித்து மறுசுழற்சி செய்வதற்கான நகரத்தின் முதல் ரிவர்ஸ் வெண்டிங் மெஷின் டிராப் அண்டு டிரா (Drop and draw) திருச்சி மாநகராட்சி

மூலம் ரூ.1.8லட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுபோன்ற இயந்திரங்கள் கோயம்புத்தூர் பேருந்து நிலையத்திலும், ஈரோடு இரயில் நிலையங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இவ்வகையான இயந்திரங்கள், பயன்படுத்தப்பட்ட நெகிழி புட்டிகளை ஏற்றுக்கொண்டு அதற்கு மாறாக ஒரு கோப்பை குடிநீர் அல்லது இலவசமாக அலைபேசியில் சார்ஜ் ஏற்ற பயன்படுகிறது. (Free Mobile Charging).

கூட்டத்தின் நிறைவுரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்கள் நெகிழி கழிவுகளை பயன்படுத்தி மறுசுழற்சி செய்வது பற்றி விளக்கிய முனைவர். ஜெ. ரகுநந்தன், செல்வன். சுதர்ஷன், திரு. எம். நல்லமுத்துப்பிள்ளை மற்றும் முனைவர். எஸ். சந்திரசேகரன், அவர்களைப் பாராட்டினார்.

கருத்தரங்கின் முடிவுரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி.பொன்னையன், அவர்கள் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் இலக்கினை 2030–ற்குள் அடைய துறைகளின் மத்தியில் ஒருங்கிணைப்பும் மக்களின் பங்கேற்பும் மிக முக்கியம் எனத் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**